

திருச்சுழி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ந.புதுப்பட்டி, அகத்தாகுளம், நல்லதரை, விடத்தகுளம் புதூர், விடத்தகுளம், மேலேந்தல், அணிக்கலக்கியேந்தல், வேலாயுதபுரம், புளியங்குளம், மிதிலைக்குளம், இலுப்பைகுளம், மைலி, காரேந்தல், நாடாகுளம், அம்பனேரி, கொக்குளம், சூச்சனேரி, பள்ளிமடம், சூச்சனேரிப்பட்டி, பச்சேரி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கழக வேட்பாளரும் தமிழ்நாடு நிதி அமைச்சருமான தங்கம் தென்னரசுவுக்கு கழக மாற்றுத் திறனாளிகள் அணியின் செயலாளர் பேராசிரியர் தீபக்நாதன், மக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். கழக வேட்பாளர் தங்கம் தென்னரசு அவர்களும் அப்போது உடன் இருந்தார்கள்.



பூந்தமல்லி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி தொகுதி மறு சீரமைப்பைக் கண்டித்து கருப்பு சட்டை அணிந்து பூந்தமல்லி கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட வரதராஜபுரம் நசரத்பேட்டை, அகரமேல், மேப்பூர், செம்மரப்பாக்கம்,ஆகிய ஊராட்சிகளில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் உதயசூரியன் சின்னத்திற்கு பிரச்சாரம் மேற்கொண்டார். அருகில் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கிளைக் கழகச் செயலாளர்கள் கழக இந்நாள் முன்னாள் மூத்த முன்னோடிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள்

### அதிமுக பிரமுகர் வீட்டில் கல் எறிந்த விவகாரத்திலும், மருத்துவக் கல்லூரி மாணவர் தற்கொலை விவகாரத்திலும் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்திய

# அ.தி.மு.க. வேட்பாளர் மீது ரூ. 10 கோடி மான நஷ்ட வழக்கு: தேர்தல் ஆணையத்திடமும் புகார்!

## திருவள்ளூர் கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் பேட்டி!

திருவள்ளூர் ஏப்.17:

திருவள்ளூர் மாவட்ட அதிமுக தொழில்நுட்ப பிரிவு துணை செயலாளர் ஹரிஷ் பாலாஜி திருவள்ளூர் நகராட்சி வி.எம்.நகரில் வசித்து வருகிறார். அவரது வீட்டில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு நள்ளிரவில் மர்ம நபர்கள் முகமூடி அணிந்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்று அவரது வீட்டின் மீது சரமாரியாக கல்வீசி தாக்கினர். இதனால் வீட்டின் கண்ணாடிகள் உடைந்தது. இதுகுறித்து தகவல் அறிந்து அங்கு வந்த அதிமுக வேட்பாளர் பி.வி.ரமணா ஹரிஷ் பாலாஜியிடம் விவரங்களை கேட்டார். பிறகு சிசிடிவி யில் பதிவான காட்சிகளையும் பார்வையிட்டார். அப்போது திமுக வேட்பாளர் வி. ஜி.ராஜேந்திரன் தோல்வி பயம் காரணமாக அவரது தூண்டுதலின் பேரில் கல் வீசி தாக்கியதாக செய்தியாளர்களிடம் அதிமுக வேட்பாளர் பி.வி.ரமணா பேட்டி அளித்தார். இந்த சம்பவம் குறித்து நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் தாமோதரன் வழக்குப் பதிவு செய்து சிசிடிவியில் பதிவான காட்சிகளைக் கொண்டு விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் கல் வீசி தாக்கியது கடம்பத்தூர் ஒன்றியம், காரணி கிராமத்தை சேர்ந்த வெங்கடேசன் மகன் விக்னேஷ் (25) என்பதும் அவர் அதிமுக பிரமுகர் என்பதும் தெரியவந்தது . இதனையடுத்து அந்த

இளைஞரை கைது செய்து மேற்கொண்ட

விசாரணையில்



திருவள்ளூரை சேர்ந்த சக்திவேல் என்பவர் நடத்தி வரும் ஷைன் ஸ்போர்ட்ஸ் அகாடெமியில் தடகள பயிற்சியாளராக இருப்பதாக வும், அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளராக இருக்கும் ஹரிஷ் பாலாஜி கட்சியில் தன்னை வளரவிடாமல் தடுப்பதாகவும், அனைத்து நிகழ்ச்சிகளிலும் தன்னை மட்டம் தட்டி வந்ததால் விரக்தியிலிருந்த நான் அன்று இரவு சரக்கு அடித்து விட்டு போதையில் இருந்ததால் ஹரிஷ் பாலாஜியின் வீட்டின் மீது கல் வீசி தாக்குதல் நடத்தியதாக ஒப்புக் கொண்டார். அதன் பேரில் இன்ஸ்பெக்டர் தாமோதரன் விக்னேஷை திருவள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இன்று திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது, அதிமுக பிரமுகர் வீட்டில் கல் வீசி தாக்கியதாக என் மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தினார். ஆனால் அதிமுக பிரமுகரே கல் வீசியதாக காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களில் வந்த செய்திகளை காண்பித்து விவரித்தார். மேலும் மருத்துவக் கல்லூரி மாணவர் தற்கொலை விவகாரத்தில் கல்லூரி மாணவனை பிரச்சாரத்திற்கு அழைத்ததால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதாக மாணவனின் பெற்றோரிடம் தவறான தகவலை சொல்லி திசை திருப்ப அதிமுக வேட்பாளர் பி.வி. ரமணா முயன்றார். ஆனால் மாணவன் தற்கொலை செய்து கொண்ட காரணத்தை காவல்துறை விளக்கமாக தெரிவித்ததால் பெற்றோர்கள் அமைதியாக உடலைப் பெற்று சென்றனர். ஏற்கனவே 20 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்று வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் என்ற ஒரே காரணத்திற்காக தன் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி வரும் அதிமுக வேட்பாளர் பி.வி ரமணா மீது தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்திருக்கிறோம். அதே போல் நீதிமன்றத்திலும் 10 கோடி ரூபாய் மான நஷ்ட வழக்கு தொடர போவதாகவும் எச்சரித்தார். பழைய வில்லன் நடிகர் நம்பியார் பாணியில் வில்லங்கத்தனமான பாணியில் செயல்படாமல் புதிய பாணியில் செயல்படுமாறும் கிண்டல் அடித்தார். மேலும், தான் எம்எல்ஏவாக இருந்தபோது செய்த சாதனைகளை சொல்லி வாக்கு சேகரிப்பதாகவும், அதிமுக வேட்பாளர் பி. வி.ரமணா 5 ஆண்டுகள் அமைச்சராக இருந்தபோது செய்த சாதனைகளை சொல்லி ஓட்டு கேட்காமல் அவருக்கு உள்ள தோல்வி பயத்தாலேயே என் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துவதாகவும் குற்றம் சாட்டினார். கடந்த முறை 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாகவும் இந்த முறை குறைந்தது 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன். தோல்வியை பரிசாக பி.வி. ரமணாவுக்கு வழங்குவேன் என்றும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.இதில் திருவள்ளூர் நகர திமுக செயலாளர் சி. சு.ரவிச்சந்திரன், முன்னாள் நகர்மன்ற தலைவர் பொன் பாண்டியன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அப்போது உடன் இருந்தனர்.

### வில்லிவாக்கம் தொகுதியில் அடிப்படை வசதிகள் –

# இளைஞர் முன்னேற்றத்திற்கு புதிய திட்டங்கள்!

## வேட்பாளர் கார்த்திக் மோகன் உறுதி!



சென்னை,ஏப்.17–

த.வெ.க. வில்லிவாககம் பகுதி செயற்குழு உறுப்பினர் ஆர். ஜாப்லீ மற்றும் அதிமுக முக்கிய பிரமுகர் அசோக் குமார், மற்றும் 150 மாற்று கட்சி உறுப்பினர்கள் வேட்பாளர் கார்த்திக் மோகன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியில் 95வது வார்டுக்கு பொதுமக்களிடம் திமுக வேட்பாளர் கார்த்திக் மோகன் பல்வேறு முக்கிய வாக்குறுதிகளை வழங்கினார் அதன்படி, சோலையம்மன் கோவில் தெரு - மாதா கோவில் எதிரில் உள்ள பகுதியில் சிறுவர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய புதிய சிறுவர் பூங்கா அமைக்கப்படும். இது அந்தப் பகுதியின் குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான விளையாட்டு சூழலை உருவாக்கும். மேலும், மாதா கோவில் தெரு மற்றும் அதன் சுற்றுவட்டார இளைஞர்கள் பயன்பெறும் வகையில், அனைத்து நவீன உபகரணங்களுடன் கூடிய புதிய உடற்பயிற்சி கூடம் (ஜிம்) அமைக்கப்படும் என்று கார்த்திக் மோகன் உறுதியளித்தார்.

மேலும், லாக்மா தெருவில் தற்போது பழுதடைந்துள்ள கழிவுநீர் வடிகால் குழாய்கள் முழுமையாக அகற்றப்பட்டு, அதிக திறன் கொண்ட புதிய நவீன வடிகால் அமைப்பு உருவாக்கப்படும். இதன் மூலம் மழைக்காலங்களில் ஏற்படும் நீர் தேக்கம் மற்றும் சுகாதார சிக்கல்கள் தீர்க்கப்படும் என்றார் கார்த்திக் மோகன். இத்துடன், கலைஞர் கருணாநிதி நகர் பகுதியில் இளைஞர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்களுக்காக, அனைத்து நவீன உடற்பயிற்சி உபகரணங்களுடன் கூடிய மேலும் ஒரு புதிய ஜிம் அமைக்கப்படும், இந்த திட்டங்கள் அனைத்தும் வில்லிவாக்கம் தொகுதியை முழுமையான முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்டுள்ளன என்றும் கார்த்திக் மோகன் தெரிவித்துள்ளார்.

நமது பாரம்பரியக் கலையான சிலம்பத்தை ஆர்வத்துடன் கற்று வரும் குழந்தைகளை கார்த்திக் மோகன் இன்று,நேரில் சந்தித்து உரையாடினார், அப்போது அந்த குழந்தைகள் , தாங்கள் எந்தவித இடையூறும் இன்றி தொடர்ந்து சிலம்பம் பயிற்சி பெற ஒரு பிரத்யேக மைதானம் அமைத்துத் தர வேண்டும் என்று கார்த்திக் மோகன் இடத்தில் கோரிக்கை வைத்தார்கள். விளையாட்டுத்துறைக்கு, நமது பாரம்பரிய கலைகளுக்கு தொடர்ந்து பெரும் ஊக்கமளித்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அவர்களின் இந்தக் கோரிக்கை தான் வெற்றி பெற்றவுடன் நிறைவேற்றித் தரப்படும் என்று உறுதியளித்தார்.

இன்று, தவெக வில்லிவாககம் பகுதி செயற்குழு உறுப்பினர் ஆர். ஜாப்லீ மற்றும் அதிமுக முக்கிய பிரமுகர் அசோக் குமார் , உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் 150 மாற்று கட்சி உறுப்பினர்கள் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர் பாபு அவர்களின் வழிகாட்டுதலுடன் வில்லிவாக்கம் திமுக வேட்பாளர் கார்த்திக் மோகன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி 98 வது வட்டம் கே.கே. நகர் 1வது தெரு அருகே பிரச்சாரத்தை தொடங்கிய அவர் தொடர்ந்து கே.கே. நகர் 2,3,4,5,6,7,8,9,10,11 தெருக்கள், கே. எச். ரோடு வழியாக போக்ஸ் சந்து, என்.எம்.கே தெரு வழியாக சென்று சோமசுந்தரம் தெருக்கள் மற்றும் வி.பி. காலனி முழுவதும், கே. எச். ரோடு வழியாக, ராமானுஜம் நகரில் பிரச்சாரம் நிறைவு செய்தார்.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி அண்ணநகர் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு 16.04.2026 நேற்று அண்ணாநகர் வடக்கு பகுதி, 103அ வட்டத்தில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எம்.கே.மோகன், எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் ச.பரமசிவம், தொகுதி பார்வையாளர் வே.கௌதமன், வட்டக்கழக செயலாளர் கே.அருள் கண்ணன், தோழமை கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில், மீஞ்சூர் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் பகுதியில், பாஜக ஆளாத மாநிலங்களுக்கு மட்டும் , ஓரவஞ்சனை காட்டும் ஒன்றிய அரசு கொண்டுவர முயற்சித்துக்கொண்டிருக்கக்கூடிய, தொகுதி மறுவரையறை சீர்திருத்த சட்ட மசோதாவுக்கு எதிராக வீடுகள் தோறும் கருப்புக் கொடியேற்றி, சட்ட மசோதா தாக்கல் செய்யக்கூடிய நகலை எரித்து எதிர்ப்பினை தெரிவித்தனர் உடன் பொன்னேரி கழக வேட்பாளர் துரை சந்திரசேகர் மற்றும் திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்

### கழக வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலினை ஆதரித்து

## சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில்

# சேப்பாக்கம் 114 (அ) 114 வட்டங்களில் வாக்கு சேகரிப்பு!

## மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் அறிக்கை!

சென்னை, ஏப். 17

சென்னை மேற்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவுறுத்தலின்படி, சேப்பாக்கம் பகுதிக்குட்பட்ட 114, 114 (அ) ஆகிய வட்டங்களில் உள்ள குடியிருக்கும் பொதுமக்களிடம் சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா அணி சார்பில், மாவட்ட அமைப்பாளர் சி. கே.ரெங்கராஜ் தலைமையில் கழக அரசின் சாதனைகளை விளக்கியும், துண்டறிக்கை விநியோகித்தும், உதயசூரியனுக்கு வாக்கு சேகரிப்பு நாளை (18.04.2026 சனிக்கிழமை) காலை 7 மணி முதல் 10 மணி வரை 114 (அ) வது வட்டத்தில் பிரச்சாரம் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் சேப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர் S. மதன்மோகன் எம்.சி, வட்டச் செயலாளர்கள் மு.தமீம் அன்சாரி, கே.கோபி, ஆகியோர் முன்னிலையில் வீடு வீடாக நேரில் சென்று பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக தொகுதி மறுவரை என்ற பெயரில் தென்மாநிலங்களின் குரலை ஒடுக்கக்கூடிய தொகுதி மறுவரையறை சட்ட மசோதாவை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி தலைமையில் சுமார் 500 க்கும் மேற்பட்டோர் கருப்பு கோடி கையில் ஏந்தி கண்டன ஆர்ப்பாட்ட வாசகங்களை கையில் பிடித்து கண்டன கோஷங்களை எழுப்பினார். இதில் ஒன்றியத்துக்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய, வார்டு கழக, ஊராட்சி கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா. வினோத் நன்றி கூறினார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழகத்தின் சார்பில் சோழிங்கநல்லூர் தொகுதி வார்டு எண் 198 மற்றும் 199 சோழிங்கநல்லூர் காரப்பாக்கம் பகுதிகளில் வீதியாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து, கழக அரசின் சாதனைகளை எடுத்துக்கூறி பொது மக்களிடம் சோழிங்கநல்லூர் தொகுதி தி.மு.க வேட்பாளர் ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். டாக்டர்.நா.சந்திரபாபு, வி.இ. மதியழகன், பாலவாக்கம் க.சோமு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 131 ‘அ’ வட்டத்தில் இன்று

# வேட்பாளர் ராஜா அன்பழகன் வாக்கு சேகரிக்கிறார்!

## எம். கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள்

சென்னை, ஏப்.17–

131அ வட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்டம், தி.நகர் கிழக்கு பகுதி 131அ வட்டம் சார்பில், தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் ராஜா அன்பழகன் (17.4.26) இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் 131அ வட்டத்தில் உள்ள 10 மற்றும் 14வது தெரு, அசோக் நகர் (மல்லிகைப்பூ காலனி) யில் பிரச்சாரத்தைத் தொடங்கி பிருந்தாவனம் பிரதான சாலையில் முடிவடைகிறது.

இப்பிரச்சாரக் கூட்டத்தில் பகுதி செயலாளர்கள் K. ஏழுமலை M.C., கோ.சு. மணி, தொகுதி பொறுப்பாளர் திருமதி ரத்னா லோகேஸ்வரன் உட்பட கழக முன்னணியினர் கலந்து கொள்ள உள்ளனர்.

ஆகவே. 131அ வட்டக் கழகத்தைச் சேர்ந்த இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி உட்பட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் முகவர்கள்,உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி கேட்டுக்கொள்கிறார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் அசன் மௌலானாவை ஆதரித்து வேளச்சேரி மேற்கு பகுதி, 175 (அ) வது வட்டத்தில் வட்டச் செயலாளர் வி.சக்திவேல் தலைமையில் வீடு வீடாக சென்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வாக்கு சேகரித்தனர். இதில் கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், வேளச்சேரி மேற்கு பகுதிச் செயலாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி, மாவட்டப் பொருளாளர் எஸ்.பாஸ்கரன் எம்.சி, 175 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி முருகவேல், வி. சண்முகநாதன், எஸ்.தியாகராஜன், கூட்டணி கட்சி தோழர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.